செய்தி வெளியீடு எண்: 82 நாள்: 07.02.2017

# திருவள்ளூர் கலவல கண்ணன் செட்டி இந்து உயர்நிலை பள்ளியில் நடைபெற்று வரும் தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை கூட்டுத் தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

~~~~~

திருவள்ளூர் கலவல கண்ணன் செட்டி இந்து உயர்நிலை பள்ளியில் நடைபெற்று வரும் தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை கூட்டுத் தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.02.2017) நேரில் பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது " தமிழகத்தில் தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை கூட்டுத் தடுப்பூசி வழங்கும் முகாம் நடைபெற்று வருகிறது. மொத்தம் 5,60,704 குழந்தைகளுக்கும் 1977 அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் 1787 அங்கன்வாடி மையங்களிலும் மற்றும் அனைத்து கிராமங்களிலும் முகாம்கள் அமைக்கப்பெற்று தடுப்பூசி போடப்படுகிறது. இம்முகாமில் 483 சுகாதாரத் துறை பணியாளர்கள், 1209 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆக மொத்தம் 1692 எண்ணிக்கையிலான நபர்கள் 403 குழுக்கள் மூலமாக ஈடுபடுத்தப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த தடுப்பூசி மூலம் பெண் குழந்தைகளுக்கு வருங்காலங்களில் 30 விதமான நோய்கள் தடுக்கப்படும். மாவட்டத்தில் நேற்று வரை 31,577 9 மாதம் முதல் 15 வயது உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கி தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை ஆகியவை முற்றிலுமாக தடுக்க ஒத்துழைப்பு தரவேண்டும் என மாவட்ட நிர்வாகம் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.ஜே. பிரபாகரன், பயிற்சி மருத்துவர் மரு.தீபலட்சுமி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~